# இஸ்லாமிய ஒழுக்கக் கண்ணோட்டத்தில் ஸினா: உடல் மற்றும் உளவியல் பரிமாணங்களின் பகுப்பாய்வு

# Zina in Islamic Ethical Perspective: An Analysis of Its Physical and Psychological Dimensions

*Fayas, S.M.*[1]
smfayas2002@gmail.com

## Abstract

In Islamic ethical and legal frameworks, the concept of Zina (adultery/fornication) plays a crucial role in safeguarding moral stability within human society. This study examines Zina not merely as a physical act of illicit sexual intercourse, but as a broader ethical construct that includes several preliminary stages manifested through the actions of the eyes, ears, tongue, hands, feet, and heart. The primary objective of this research is to analyze how Islam identifies different forms of Zina and emphasizes a preventive ethical framework to regulate and control them. This study adopts a qualitative content analysis methodology. The Qur'an and Hadith literature serve as primary sources, supplemented by interpretative insights from classical and contemporary Islamic scholars. The analysis explores how lustful gaze, inappropriate listening, suggestive speech, unlawful physical contact, intentional movement toward immoral environments, internal desires, and ultimately physical sexual relations affect both individual morality and social purity. These stages are found to be interrelated, forming a gradual process of moral deterioration. The key finding of the study reveals that controlling the preliminary forms of Zina significantly contributes to spiritual development, preservation of the family structure, and maintenance of social cohesion. Furthermore, the study highlights that contemporary digital environments and social media platforms have intensified such ethical challenges, making awareness and self-discipline increasingly essential. Understanding the broader dimensions of Zina serves as a foundational element in Islamic moral education and provides a guiding framework for individual ethics, spiritual consciousness, and social well-being.

***Keywords:*** *Adultery, Islamic ethics, moral discipline, zina.*

[1] *Research Assistant, Arabic and Islamic Civilization Unit, Faculty of Arts, University of Colombo, Sri Lanka*

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாமிய ஒழுக்க மற்றும் சட்டக் கட்டமைப்புகளில் ஸினா (விபச்சாரம்) என்ற கருத்து மனித வாழ்வின் ஒழுக்க நிலைத்தன்மையை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த ஆய்வு, ஸினா என்பது வெறும் உடல் சார்ந்த விபச்சாரச் செயல் மட்டுமல்லாது, கண்கள், காதுகள், நாவு, கைகள், கால்கள் மற்றும் இதயம் ஆகிய உறுப்புகளின் செயல்பாடுகளின் மூலம் வெளிப்படும் பல முன்னோடி நிலைகளையும் உள்ளடக்கிய விரிவான ஒழுக்கக் கருத்தாக இருப்பதை ஆராய்கிறது. இவ்வாய்வின் முக்கிய நோக்கம், இஸ்லாம் ஸினாவின் பல்வேறு வடிவங்களை எவ்வாறு அடையாளம் காண்கிறது என்பதையும், அவற்றைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை (preventive) ஒழுக்க அணுகுமுறையை எவ்வாறு வலியுறுத்துகிறது என்பதையும் விளக்குவதாகும். இந்த ஆய்வு பண்புசார் உள்ளடக்கப் பகுப்பாய்வு (Qualitative Content Analysis) முறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் தொகுப்புகள் முதன்மை ஆதாரங்களாக பயன்படுத்தப்பட்டு, இஸ்லாமிய அறிஞர்கள் மற்றும் ஞானிகளின் விளக்கங்களுடன் ஒப்பீட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வு, ஆசையைத் தூண்டும் பார்வை, பொருத்தமற்ற கேட்டல், கவர்ச்சியான பேச்சு, சட்டவிரோத தொடுதல், தவறான நோக்கத்துடன் இயக்கம், உள் ஆசைகள் மற்றும் இறுதியில் உடல் உறவு ஆகியவை தனிநபர் ஒழுக்கத்தையும் சமூகத் தூய்மையையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும் ஆராய்கிறது. இந்த அனைத்து நிலைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக இருந்து, ஒழுக்க வீழ்ச்சியின் படிப்படியான வளர்ச்சியை உருவாக்குகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வின் முக்கிய முடிவாக, ஸினாவின் முன்னோடி வடிவங்களை கட்டுப்படுத்துவதன் மூலம் மனிதன் தனது ஆன்மீக வளர்ச்சியை மேம்படுத்தவும், குடும்ப அமைப்பை பாதுகாக்கவும், சமூக ஒற்றுமையை நிலைநிறுத்தவும் முடியும் என்பது வெளிப்படுகிறது. மேலும், சமகால டிஜிட்டல் சூழல் மற்றும் சமூக ஊடக பயன்பாடு இத்தகைய ஒழுக்கச் சவால்களை அதிகரிக்கக்கூடியதாக இருப்பதால், விழிப்புணர்வு மற்றும் சுயக் கட்டுப்பாடு அவசியமானதாகும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது. ஸினாவின் பரந்த பரிமாணங்களைப் புரிந்துகொள்வது இஸ்லாமிய ஒழுக்கக் கல்வியில் முக்கிய அடித்தளமாக இருந்து, தனிநபர் ஒழுக்கம், ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் சமூக நலனுக்கான வழிகாட்டுதலாக அமைகிறது.

திறவுச் சொற்கள்: இஸ்லாமிய ஒழுக்கம், ஒழுக்கக் கட்டுப்பாடு, ஸினா, விபச்சாரம்.

## *01.* ஆய்வு அறிமுகம்

இஸ்லாம் ஒழுக்கத் தூய்மையையும் குடும்பத்தின் புனிதத்தன்மையையும் ஒரு சமநிலையான மற்றும் நலமிக்க சமூகத்தின் அடித்தளமாகக் கருதுகிறது. இந்த ஒழுக்க அடித்தளத்தைப் பாதுகாப்பதற்காக, ஸினா (Zina - பொதுவாக விபச்சாரம் அல்லது சட்டவிரோத பாலியல் உறவு எனப் பொருள்படும்) இஸ்லாத்தில் மிகப்பெரிய பாவங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

அல்குர்ஆன், ஸினா செயலை மட்டும் அல்லாது அதற்கு வழிவகுக்கும் சூழல்களையும் கடுமையாகத் தடை செய்கிறது. அல்லாஹ் கூறுகின்றான்:

> "நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும், (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது." (அல்குர்ஆன் 17:32).

இந்த வசனம் இஸ்லாம் பின்பற்றும் தடுப்பு அடிப்படையிலான ஒழுக்க அணுகுமுறையை தெளிவாக வெளிப்படுத்துகிறது. அதாவது, தவறான செயலைத் தடுக்க மட்டுமல்லாமல், அதற்குக் காரணமாக இருக்கும் அனைத்து வழிகளையும் முன்கூட்டியே மறுப்பதன் மூலம் மனிதனை ஒழுக்கமான வாழ்க்கைக்கு வழிநடத்துகிறது (Kamali, 2008). உலகியலான சில அணுகுமுறைகள் ஸினாவை வெறும் உடல் ரீதியான பாலியல் குற்றமாக மட்டுமே வரையறுக்கின்றன. ஆனால் இஸ்லாமிய போதனைகள் அதனை மிகவும் விரிவான ஒழுக்கக் கருத்தாக விளக்குகின்றன. மனிதனின் உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் உடலுறுப்பு செயல்கள் அனைத்தும் ஒழுக்கப் பொறுப்பின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றன.

இதனால் ஸினா என்பது உடல் செயல் மட்டுமல்ல; பார்வை, கேள்வி, மொழி மற்றும் உள்ளுணர்வு போன்ற நுட்பமான செயல்களாலும் அது ஆரம்பமாகக்கூடும். இவ்வாறான உடலற்ற அல்லது மறைமுக வடிவங்கள் காலப்போக்கில் மனிதனின் ஒழுக்க ஒருமைப்பாட்டை பாதித்து பெரிய பாவங்களுக்கு வழிவகுக்கக்கூடும் என்று இஸ்லாமிய அறிஞர்கள் விளக்குகின்றனர். இதற்கான ஆதாரமாக நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் ஹதீஸ் குறிப்பிடத்தக்கது.

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

> நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு மனிதன் செய்யக்கூடிய ஸினாவின் (விபச்சாரத்தின்) ஒரு பங்கினை அல்லாஹ் அவனுக்காக எழுதிவைத்திருக்கிறான்; அதிலிருந்து அவன் முற்றிலும் தப்ப முடியாது. கண்களின் ஸினா என்பது காம நோக்கத்துடன் பார்ப்பதாகும்; காதுகளின் ஸினா என்பது (காமத்தைத் தூண்டும்) பேச்சுகளையோ பாடல்களையோ கேட்பதாகும்; நாவின் ஸினா என்பது (ஒழுக்கமற்ற) காமவாசனைத் தூண்டும் சொற்களைப் பேசுவதாகும்; கைகளின் ஸினா என்பது (காம நோக்கத்துடன்) தொடுவதாகும்; கால்களின் ஸினா என்பது (விபச்சாரம் நிகழும் இடத்திற்குச் செல்லும் நோக்கத்துடன்) நடப்பதாகும். இதற்கிடையில் இதயம் ஆசைப்படுகிறது மற்றும் விரும்புகிறது; பின்னர் தனிப்பட்ட உறுப்புகள்

(உண்மையான செயலில் ஈடுபடுவதன் மூலம்) அதை உறுதிப்படுத்தவோ அல்லது அதை மறுக்கவோ செய்கின்றன." (Riyad as-Salihin, Book 17: Hadith 1622).

இந்த ஹதீஸ், ஸினாவை ஒரு படிப்படியான ஒழுக்க வீழ்ச்சி செயல்முறை என விளக்குகிறது. அதாவது, உணர்வுகளின் ஈர்ப்பு மற்றும் உள்ளார்ந்த ஆசைகள் முதலில் தோன்றி, பின்னர் அவை உடல் செயல்களில் முடிவடையக்கூடும். இதன் மூலம் மனிதன் தனது பார்வை, எண்ணம் மற்றும் நடத்தை ஆகிய அனைத்தையும் கட்டுப்படுத்த வேண்டும் என்ற இஸ்லாத்தின் முழுமையான ஒழுக்கக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது (Al-Qaradawi, 1995).

வரலாற்று ரீதியாக இஸ்லாமிய சட்டவியல் (Fiqh), உடல் ரீதியான ஸினா செயலை கடுமையான குற்றமாகக் கருதி அதற்கான ஹுதூத் (அல்குர்ஆன் மற்றும் நபி வழியின்படி, சமூகத்திற்கு எதிரான பெரும் குற்றங்களுக்கு இஸ்லாமிய சட்டத்தில் விதிக்கப்படும் கட்டாயமான தண்டனைகள்) தண்டனைகளை நிர்ணயித்துள்ளது. எனினும், இஸ்லாமிய ஒழுக்க அமைப்பின் முக்கிய நோக்கம் தண்டனை அல்ல; மாறாக சமூகத்தில் பாவம் உருவாகாமல் தடுப்பதே முதன்மையான நோக்கமாகும்.

பாரம்பரிய இஸ்லாமிய அறிஞர்கள் ஸினா சமூக அமைப்பை சீர்குலைக்கும் ஒரு தீவிரமான ஒழுக்கக் குற்றமாகக் கருதினர். இப்னு கதீர் தனது தஃப்ஸீரில், ஸினா குடும்ப அமைப்பை உடைத்து, சட்டவிரோத குழந்தைகள் பிறப்பதற்கும் சமூகத்தில் நம்பிக்கையின்மை உருவாகுவதற்கும் காரணமாகிறது என விளக்குகிறார் (Ibn Kathir, 2000).

இஸ்லாம் தோன்றிய காலத்திற்கு முன் அரேபிய சமூகத்தில் ஒழுக்க கட்டுப்பாடுகள் தளர்வாக இருந்ததாக வரலாற்று ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. இஸ்லாம் அந்த சூழ்நிலையை மாற்றும் நோக்கில் பல தடுப்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. குறிப்பாக ஆண்களும் பெண்களும் தங்களது பார்வையைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்றும், மஹ்ரம் அல்லாத ஆண்-பெண் தனிமையில் இருக்கக்கூடாது என்றும் அல்குர்ஆன் வழிகாட்டுகிறது (அல்குர்ஆன் 24:30-31). இத்தகைய வழிமுறைகள் ஸினாவிற்கு வழிவகுக்கும் சூழல்களைத் தடுக்கின்றன.

சமகால அறிஞர்கள் இந்த போதனைகளின் முக்கியத்துவத்தை நவீன சூழலில் மேலும் வலியுறுத்துகின்றனர். உலகமயமாக்கல், ஊடக வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மனித ஆசைகளை தூண்டும் பல புதிய சூழல்களை உருவாக்கியுள்ளது (Esposito, 2011). குறிப்பாக சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்கள் மூலம் வெளிப்படையான அல்லது தூண்டுதலான உள்ளடக்கங்கள் எளிதாக அணுகக்கூடியதாக மாறியுள்ளன. இதனால் ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள "சிறிய ஸினா" வடிவங்கள் (பார்வை, கேள்வி, கற்பனை மற்றும் உணர்ச்சி

ஈடுபாடுகள்) அதிகமாக ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. இந்த நிலைமை, ஸினா என்பது வெறும் உடல் செயல் மட்டுமே என்ற தவறான புரிதலை எதிர்க்கிறது. உண்மையில், ஒழுக்க ரீதியாக தீங்கு விளைவிக்கும் எண்ணங்கள், பார்வைகள் மற்றும் உணர்ச்சிகள் பாவத்தை இயல்பாக்கி, பெரிய தவறுகளுக்கு வழிவகுக்கக்கூடும்.

அலி இப்னு ஹுஸைன் (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

> நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் மனைவியான ஸஃபிய்யா பின்த் ஹுயய் (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்கள் இஃதிகாஃபில் இருந்தபோது பள்ளிவாசலுக்கு வந்து அவர்களுடன் சில நேரம் பேசிவிட்டு திரும்பிச் சென்றார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் அவர்களை வழியனுப்பிச் செல்வதற்காக உடன் நடந்தார்கள். அந்த நேரத்தில் அன்சாரிகளைச் சேர்ந்த இரு மனிதர்கள் அங்கு வந்தனர். அவர்கள் நபி (ஸல்) அவர்களைக் கண்டதும் வேகமாகச் செல்ல முற்பட்டனர். உடனே நபி (ஸல்) அவர்கள், "சற்று நின்றுகொள்ளுங்கள்; இவர் ஸஃபிய்யா பின்த் ஹுயய், என் மனைவி" என்று கூறினார்கள். அதற்கு அவர்கள், "சுப்ஹானல்லாஹ்! அல்லாஹ்வின் தூதரே!" என்று கூறினர். அப்போது நபி (ஸல்) அவர்கள், "நிச்சயமாக ஷைத்தான் மனிதனின் உடலில் இரத்தம் ஓடும் விதத்தில் ஓடிக் கொண்டிருக்கிறான். எனவே, அவன் உங்கள் உள்ளங்களில் ஏதேனும் தீய எண்ணத்தை ஏற்படுத்திவிடக் கூடுமோ என்று நான் அஞ்சினேன்" என்று கூறினார்கள்" (Sahih al-Bukhari, Book 93, Hadith 7171; Sahih Muslim).

இதன் பொருள், மனிதனின் மனதிலும் உணர்வுகளிலும் சிறிய தூண்டுதல்களை உருவாக்கி, அவை மெதுவாக பெரிய பாவங்களாக மாறக்கூடும் என்பதாகும் (மனிதனின் உள்ளத்தில் சந்தேகம், தவறான எண்ணம் மற்றும் ஒழுக்கச் சிதைவிற்கான தூண்டுதல்களை உருவாக்குவதில் ஷைத்தானின் பங்கை எடுத்துக்காட்டுகிறது). இதனால் இஸ்லாம் தக்வா (இறையச்சம்), திக்ர் மற்றும் தொழுகை போன்ற ஆன்மீக வழிபாடுகள் மூலம் உள்ளார்ந்த ஒழுக்கத்தை வளர்க்க வலியுறுத்துகிறது. இவ்வாறு உடல், மனம் மற்றும் ஆன்மா ஆகிய மூன்றையும் ஒருங்கிணைக்கும் முழுமையான ஒழுக்க அமைப்பை இஸ்லாம் உருவாக்குகிறது.

இன்றைய உலகில் சமூக ஊடகங்கள், ஆன்லைன் தொடர்புகள் மற்றும் மெய்நிகர் உறவுகள் மனிதர்களுக்கிடையிலான எல்லைகளை மங்கலாக்கியுள்ளன. இதனால் ஸினாவின் பரந்த கருத்தை மீண்டும் ஆராய்வது மிகவும் அவசியமாகிறது. சமகால ஆய்வுகள் இணையவழி தொடர்புகள் மற்றும் சமூக ஊடகப் பயன்பாடு குடும்ப உறவுகளிலும் திருமண நம்பிக்கையிலும் புதிய சவால்களை உருவாக்கியுள்ளதாகக் குறிப்பிடுகின்றன (Nasr, 2002). இதுபோன்ற

சூழல்களில், இஸ்லாமிய போதனைகள் வழங்கும் எச்சரிக்கைகள் காலத்தைக் கடந்தும் பொருந்தக்கூடிய ஒழுக்க வழிகாட்டுதல்களாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன.

### *02. ஆய்வின் பிரச்சினைக் கூற்று*

இஸ்லாத்தில் ஸினா (Zina) மிகவும் தெளிவாகவும் கடுமையாகவும் தடைசெய்யப்பட்ட ஒரு ஒழுக்க மீறலாகக் கருதப்படுகிறது. இருப்பினும், சமகால முஸ்லிம் சமூகத்தில் பலர் ஸினாவை வெறும் உடல் ரீதியான விபச்சாரம் அல்லது திருமண துரோகம் என்ற குறுகிய பொருளில் மட்டுமே புரிந்துகொள்கின்றனர். இதன் விளைவாக, அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் ஆகிய இஸ்லாத்தின் அடிப்படை ஆதாரங்களில் விளக்கப்பட்டுள்ள ஸினாவின் பரந்த ஒழுக்கப் பரிமாணங்கள் போதியளவில் புரிந்துகொள்ளப்படாமலும் கவனிக்கப்படாமலும் இருக்கின்றன.

உண்மையில், இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் ஸினா என்பது உடல் ரீதியான செயலாக மட்டுப்படுத்தப்பட்ட கருத்தல்ல. மாறாக, அதற்கு வழிவகுக்கும் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் நடத்தைகளையும் உள்ளடக்கிய விரிவான ஒழுக்கக் கருத்தாகும். குறிப்பாக, காம நோக்கத்துடன் பார்ப்பது, காம உணர்வுகளைத் தூண்டும் அல்லது ஒழுக்கமற்ற உரையாடல்களில் ஈடுபடுவது, தவறான கற்பனைகளில் மூழ்குவது போன்ற செயல்கள் பெரிய பாவத்திற்கு வழிவகுக்கும் ஆரம்ப நிலைகளாகக் கருதப்படுகின்றன. எனினும், இவ்வாறான செயல்களின் ஒழுக்கப் பரிமாணம் குறித்து பலரிடமும் போதுமான விழிப்புணர்வு காணப்படுவதில்லை.

இந்தப் பின்னணியில், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் விளக்கியுள்ள ஹதீஸ் முக்கியத்துவம் பெறுகிறது. அந்த ஹதீஸில், கண்கள், காதுகள், நாவு, கைகள், கால்கள் மற்றும் இதயம் ஆகியவற்றின் மூலம் நிகழக்கூடிய ஸினாவின் பல்வேறு வடிவங்கள் குறிப்பிடப்படுகின்றன. இதன் மூலம், மனிதனின் உடல் உறுப்புகள் மட்டுமன்றி அவனுடைய எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் மனநிலைகளும் ஒழுக்கப் பொறுப்பிற்கு உட்பட்டவை என்பதை இஸ்லாம் தெளிவாக வலியுறுத்துகிறது.

இருப்பினும், இந்த விரிவான விளக்கத்தைப் பற்றிய சரியான புரிதலும் விழிப்புணர்வும் இல்லாத காரணத்தால், பலர் ‘‘சிறிய ஸினா’’ எனக் கருதப்படும் செயல்களில் அறியாமலேயே ஈடுபடுகின்றனர். குறிப்பாக, சமூக ஊடகங்கள், இணையவழி தொடர்பாடல்கள் மற்றும் இணையவழி உரையாடல்கள் அல்லது நிகழ்நிலை உரையாடல்கள் பரவலாகப் பயன்படுத்தப்படும் இன்றைய டிஜிட்டல் சூழலில், மனிதர்களை காமத் தூண்டுதல்களுக்குள் இட்டுச் செல்லக்கூடிய பல புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

உதாரணமாக, இணையவழி தனிப்பட்ட உரையாடல்கள், காதல் அல்லது கவர்ச்சி நோக்கமுடைய இணையத் தொடர்பாடல்கள் (Online Flirting/இயங்கலை சரசமாடல்), காம உணர்வுகளைத் தூண்டும் காட்சிகளைப் பார்ப்பது, அல்லது சமூக ஊடகங்களில் ஒழுக்க வரம்புகளை மீறும் தொடர்புகளைப் பேணுவது போன்ற செயல்கள் ஆரம்பத்தில் சாதாரணமானவை போல் தோன்றலாம். ஆனால், அவை காலப்போக்கில் ஒருவரின் ஒழுக்க எல்லைகளை மெதுவாக தளர்த்தி, தவறான நடத்தைகளை இயல்பாக்கக்கூடியதாக அமையலாம். இதன் விளைவாக, தனிநபரின் சுயக்கட்டுப்பாடும் ஒழுக்க உறுதியும் பலவீனமடைவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. இவ்வாறான நிலைகள் பின்னர் பெரிய ஒழுக்கத் தவறுகளுக்கும் நேரடியான பாவச் செயல்களுக்கும் வழிவகுக்கக்கூடும் என்று பல இஸ்லாமிய அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் (Al-Qaradawi, 1995).

இந்தக் குறுகிய அல்லது முழுமையற்ற புரிதலின் தாக்கம் தனிநபர் மட்டத்தில் மட்டுப்படுவதில்லை. மாறாக, அது குடும்பம் மற்றும் சமூகம் ஆகிய இரண்டின் மீதும் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியதாகும். குடும்ப உறவுகளில் நம்பிக்கையின்மை உருவாகுதல், திருமண உறவுகளின் பலவீனம் அல்லது உடைவு, ஒழுக்க விழுமியங்களின் சீரழிவு, மற்றும் சமூகத்தின் தார்மீக அடித்தளத்தில் ஏற்படும் மெல்லிய அரிப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகள் இதன் விளைவாக உருவாகக்கூடும்.

எனவே, ஸினா பற்றிய இஸ்லாமிய போதனைகளை வெறும் உடல் ரீதியான விபச்சாரக் கருத்துக்குள் மட்டுப்படுத்தாமல், அதன் மனவியல், உணர்வியல், ஒழுக்கவியல் மற்றும் சமூகப் பரிமாணங்களையும் உள்ளடக்கிய முழுமையான கண்ணோட்டத்தில் விளக்குவது அவசியமாகிறது. குறிப்பாக, டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்கள் மனித உறவுகளின் இயல்பை மாற்றியுள்ள இன்றைய சூழலில், ஸினா தொடர்பான இஸ்லாமிய ஒழுக்கப் போதனைகளின் உண்மையான பரப்பளவு, அதன் தடுப்பு அணுகுமுறை மற்றும் சமூக முக்கியத்துவம் ஆகியவற்றை மீளாய்வு செய்து தெளிவுபடுத்துவது இவ்வாய்வின் அடிப்படைத் தேவையாக அமைகிறது.

### *03.* ஆய்வு நோக்கங்கள்

மேற்கண்ட அறிமுகம் மற்றும் பிரச்சினைக் கூற்றின் அடிப்படையில், இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களை முன்வைக்கிறது:

- அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் ஆதாரங்களின் அடிப்படையில், இஸ்லாமிய போதனைகளில் இடம்பெறும் ஸினா (Zina) என்ற கருத்தின் பொருள், பரப்பு மற்றும் ஒழுக்கப் பரிமாணங்களை ஆராய்ந்து விளக்குதல்.

- *உண்மையான இஸ்லாமிய ஆதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஸினாவின் பல்வேறு வடிவங்களை அடையாளம் கண்டு, அவற்றை சமகால வாழ்க்கைச் சூழல்களுடனும் நடைமுறை உதாரணங்களுடனும் தொடர்புபடுத்தி விளக்குதல்.*
- *"சிறிய ஸினா" எனக் கருதப்படும் செயல்கள் எவ்வாறு படிப்படியான ஒழுக்க வீழ்ச்சியை ஏற்படுத்தி, தனிநபர்களை பெரிய பாவங்களுக்கும் நேரடியான விபச்சாரச் செயல்களுக்கும் இட்டுச் செல்கின்றன என்பதை பகுப்பாய்வு செய்தல்.*
- *சமகால சமூக மற்றும் டிஜிட்டல் சூழல்களில் ஒழுக்கச் சீர்கேட்டிலிருந்து மனிதர்களைப் பாதுகாப்பதற்காக இஸ்லாம் நிறுவியுள்ள தடுப்பு ஒழுக்கக் கட்டமைப்பையும், அதன் தனிநபர் மற்றும் சமூக முக்கியத்துவத்தையும் ஆராய்தல்.*

## *04. ஆய்வு முறைமை*

*இவ்வாய்வு, ஸினா தொடர்பான இஸ்லாமிய போதனைகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்ட பண்புரீதியான ஆய்வு* (Qualitative Research) *ஆகும். ஆய்வின் தன்மைக்கு ஏற்ப உரை பகுப்பாய்வு* (Textual Analysis) *முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையின் மூலம் இஸ்லாமிய ஆதாரங்களில் இடம்பெறும் கருத்துகள், விளக்கங்கள் மற்றும் ஒழுக்கக் கோட்பாடுகள் முறையாக ஆய்வு செய்யப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.*

*ஆய்வின் முதன்மைத் தரவுகளாக* (Primary Sources) *அல்குர்ஆன் மற்றும் நம்பகமான ஹதீஸ் தொகுப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு ஆதாரங்களும் ஸினாவின் இயல்பு, அதன் பல்வேறு வடிவங்கள், அதனால் ஏற்படும் ஒழுக்க மற்றும் சமூக விளைவுகள், மேலும் அதனைத் தடுப்பதற்காக இஸ்லாம் வழங்கியுள்ள வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை நேரடியாக வெளிப்படுத்துகின்றன. எனவே, இவை இவ்வாய்வின் அடிப்படைத் தரவுகளாகக் கருதப்படுகின்றன.*

*இரண்டாம் நிலைத் தரவுகளாக* (Secondary Sources) *பாரம்பரிய மற்றும் நவீன இஸ்லாமிய ஆய்வு நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, இப்னு கதீரின் Tafsir Ibn Kathir* (Ibn Kathir, 2000), *யூசுஃப் அல்-கர்ளாவியின்* (Al-Qaradawi, 1995) *இஸ்லாமிய ஒழுக்கம் தொடர்பான ஆய்வுகள், மற்றும் முஹம்மத் ஹாஷிம் கமாலியின்* (Kamali, 2008) *இஸ்லாமிய சட்ட மற்றும் ஒழுக்கவியல் தொடர்பான எழுத்துக்கள் ஆகியவை இதில் இடம்பெற்றுள்ளன. இந்நூல்கள், அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் இடம்பெறும் கருத்துகளின் பின்னணி, விளக்கம் மற்றும் அகலமான புரிதலை வழங்குகின்றன.*

தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படுவதற்காக கருப்பொருள் பகுப்பாய்வு முறை (Thematic Analysis Method) பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த முறையின் அடிப்படையில், ஸினா தொடர்பான அல்குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றில் இடம்பெறும் முக்கிய கருப்பொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பின்னர், ஸினாவின் பல்வேறு வடிவங்கள் வகைப்படுத்தப்பட்டு, அவற்றின் ஒழுக்க, மனவியல் மற்றும் சமூகப் பரிமாணங்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. மேலும், அவை சமகால சமூக மற்றும் டிஜிட்டல் சூழல்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வு முழுமையாக நூலக மற்றும் ஆவண அடிப்படையிலான (Desk-Based Library Research) ஆய்வாக அமைந்துள்ளது.

## *05.* கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்

இஸ்லாமிய போதனைகள் ஸினா என்ற பாவத்தை ஒரு விரிவான ஒழுக்கப் பிரச்சினையாகவும், அதே நேரத்தில் தடுப்பு அடிப்படையிலான (preventive) அணுகுமுறையுடனும் விளக்குகின்றன. அதாவது, ஸினா என்பது வெறும் உடல் சார்ந்த விபச்சாரச் செயலை மட்டுமல்ல; அதற்கு முன்னோடியாக மனிதனில் உருவாகும் பல்வேறு நடத்தை நிலைகள் மற்றும் ஒழுக்க மீறல்களும் இதன் பகுதியாகவே கருதப்படுகின்றன. நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் வழங்கிய ஹதீஸ் போதனைகளில், இத்தகைய முன்னோடி நிலைகள் கண்கள், காதுகள், நாவு, கைகள், கால்கள் மற்றும் இதயம் ஆகிய உறுப்புகளின் செயல்பாடுகளுடன் தொடர்புடையதாக விளக்கப்படுகின்றன. இவ்வாறு உருவாகும் சிறிய ஒழுக்க மீறல்கள் காலப்போக்கில் மனிதனை படிப்படியாக பெரிய பாவமான உடல் ஸினாவிற்கு இட்டுச் செல்லக்கூடிய அபாயத்தை உருவாக்குகின்றன.

மேலும், மனிதனின் உள்ளுணர்வு, ஆசைகள் மற்றும் சிந்தனைகளைப் பயன்படுத்தி ஷைத்தான் ஒழுக்க வீழ்ச்சியை ஏற்படுத்த முயற்சிக்கிறான் என்பதையும் இஸ்லாமிய போதனைகள் எச்சரிக்கின்றன. இந்தச் செயல்முறை பெரும்பாலும் மெதுவாகவும் மறைமுகமாகவும் நடைபெறுவதால், சிறிய தவறுகள் மற்றும் கவனக்குறைவான நடத்தைகள் கூட பெரிய பாவங்களுக்கு வழிவகுக்கக்கூடிய சூழலை உருவாக்குகின்றன.

இந்தப் பின்னணியில், அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் வழங்கும் வழிகாட்டுதல்கள் மனிதன் தனது பார்வை, பேச்சு, நடத்தை மற்றும் உள்ளார்ந்த ஆசைகளை கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன. குறிப்பாக, சுயக்கட்டுப்பாடு, தக்வா (இறை அச்சம்) மற்றும் ஒழுக்க விழிப்புணர்வு ஆகியவை தனிநபர் ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் முக்கிய கருவிகளாக அமைகின்றன.




**புகைப்படம்: விபச்சார வகைகள்**

இதன் மூலம், இஸ்லாமிய அணுகுமுறை என்பது வெறும் பாவத்தைத் தடுக்கும் சட்டமுறை மட்டுமல்ல; மாறாக, அது மனிதனின் உள்ளார்ந்த சிந்தனைகளிலிருந்து வெளிப்படையான செயல்கள் வரை அனைத்தையும் ஒழுங்குபடுத்தும் முழுமையான ஒழுக்கக் கட்டமைப்பாகும். இவ்வகை அணுகுமுறை தனிநபர் தூய்மையையும் சமூக ஒழுக்க நிலைத்தன்மையையும் பாதுகாக்கும் அடித்தளமாக விளங்குகிறது.

### 5.1 கண்களின் ஸினா

கண்களின் ஸினா என்பது காம நோக்கத்துடன் பார்ப்பது அல்லது ஒழுக்கமற்ற மற்றும் தூண்டுதலான காட்சிகளை நோக்கிப் பார்ப்பதை குறிக்கிறது. இஸ்லாமிய போதனைகளில் இது ஒழுக்க வீழ்ச்சியின் ஆரம்ப நிலையாகக் கருதப்படுகிறது. காரணம், மனிதனின் பார்வை அவனுடைய மனதில் எண்ணங்களையும் ஆசைகளையும் உருவாக்கும் முக்கிய காரணியாக அமைகிறது.

அல்குர்ஆன் விசுவாசிகளை தங்களது பார்வையை கட்டுப்படுத்துமாறு தெளிவாக உத்தரவிடுகிறது:

> "(நபியே!) முஃமின்களான ஆடவர்களுக்கு நீர் கூறுவீராக: அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்; அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும்; நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கு

> *தெரிந்தவன். இன்னும்; முஃமினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக: அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்; தங்கள் அழகலங்காரத்தை அதினின்று (சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர (வேறு எதையும்) வெளிக் காட்டலாகாது; இன்னும் தங்கள் முன்றானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும்; மேலும், (முஃமினான பெண்கள்) தம் கணவர்கள், அல்லது தம் தந்தையர்கள், அல்லது தம் கணவர்களின் தந்தையர்கள் அல்லது தம் புதல்வர்கள் அல்லது தம் கணவர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரர்கள் அல்லது தம் சகோதரர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரிகளின் புதல்வர்கள், அல்லது தங்கள் பெண்கள், அல்லது தம் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள், அல்லது ஆடவர்களில் தம்மை அண்டி வாழும் (பெண்களை விரும்ப முடியாத அளவு வயதானவர்கள்) பெண்களின் மறைவான அங்கங்களைப் பற்றி அறிந்து கொள்ளாத சிறுவர்கள் ஆகிய இவர்களைத் தவிர, (வேறு ஆண்களுக்குத்) தங்களுடைய அழகலங்காரத்தை வெளிப்படுத்தக் கூடாது; மேலும், தாங்கள் மறைத்து வைக்கும் அழகலங்காரத்திலிருந்து வெளிப்படுமாறு தங்கள் கால்களை (பூமியில்) தட்டி நடக்க வேண்டாம்; மேலும், முஃமின்களே! (இதில் உங்களிடம் ஏதேனும் தவறு நேரிட்டிருப்பின்,) நீங்கள் தவ்பா செய்து (பிழை பொறுக்கத் தேடி), நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்.*" (அல்குர்ஆன் 24:30-31).

இந்த வசனங்கள், மனிதனின் பார்வை கட்டுப்பாடின்றி இருந்தால் அது ஆசைகளைத் தூண்டி பின்னர் பெரிய பாவங்களுக்கு வழிவகுக்கும் என்பதை தெளிவாக உணர்த்துகின்றன (Ibn Kathir, 2000). இஸ்லாமிய அறிஞர்கள் கண்களை "ஆன்மாவின் ஜன்னல்கள்" எனக் குறிப்பிடுகின்றனர். பார்வையின் மூலம் மனதில் கற்பனைகள் உருவாகி, அவை படிப்படியாக ஆசைகளாக மாறக்கூடும் என்று அவர்கள் விளக்குகின்றனர் (Al-Qaradawi, 1995). எனவே, கண்களின் ஸினா வெளிப்படையாக சிறிய செயலாகத் தோன்றினாலும், அது பெரிய ஒழுக்க வீழ்ச்சிக்கான ஆரம்பப் படியாகும்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இதனை ஒரு ஹதீஸில் தெளிவாக விளக்கியுள்ளனர்: "கண்களின் ஸினா என்பது காம நோக்கத்துடன் பார்ப்பதாகும்…" (Riyad as-Salihin, Book 17: Hadith 1622). இந்த ஹதீஸ், பார்வை என்பது சாதாரண செயல் அல்ல; அது ஒழுக்க மீறல்களின் தொடக்கமாக

மாறக்கூடியது என்பதை எடுத்துரைக்கிறது. மேலும், மனிதனை சிறிய செயல்களின் வழியாக பாவத்திற்கு இட்டுச் செல்ல ஷைத்தான் முயல்கிறான் என்பதையும் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளனர்: "நிச்சயமாக, ஷைத்தான் மனிதனின் உடலில் இரத்தம் ஓடும் விதத்தில் ஓடிக் கொண்டிருக்கிறான்." (Sahih al-Bukhari, Book 93: Hadith 7171). இதன் மூலம், மனிதனின் எண்ணங்களிலும் உணர்வுகளிலும் மெதுவாக நுழைந்து அவனை பாவத்திற்குத் தள்ளும் உள்மன செயல்முறை விளக்கப்படுகிறது.

இன்றைய சமூக சூழலில், கண்களின் ஸினா பல புதிய வடிவங்களில் வெளிப்படுகிறது. குறிப்பாக சமூக ஊடகங்கள், இணையதளங்கள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் வழியாக காமத்தைத் தூண்டும் காட்சிகள் எளிதாகக் கிடைக்கின்றன. சமூக ஊடகங்களில் வெளிப்படையான புகைப்படங்கள் அல்லது வீடியோக்களை மீண்டும் மீண்டும் பார்ப்பது ஆரம்பத்தில் சாதாரணமாகத் தோன்றினாலும், அது மனதில் ஆசைகளை உருவாக்கி ஒழுக்கக் கட்டுப்பாட்டை மெதுவாகக் குறைக்கக்கூடும் (Esposito, 2011). இவ்வாறான நிலைகள் பின்னர் ஒழுக்க எல்லைகளை மீறும் தொடர்புகளுக்கும் வழிவகுக்கக்கூடும் என்று சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன (Nasr, 2002).

இஸ்லாம் இதனைத் தடுப்பதற்காக பார்வையைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இது ஒரு ஒழுக்கக் கடமையாக மட்டுமல்லாமல், ஒரு ஆன்மீகப் பயிற்சியாகவும் கருதப்படுகிறது. அல்குர்ஆன் நபி யூசுப் (அலை) அவர்களின் நிகழ்வை எடுத்துக்காட்டாக முன்வைக்கிறது:

> "ஆனால் அவளோ அவரைத் திடமாக விரும்பினாள்; அவரும் தம் இறைவனின் ஆதாரத்தைக் கண்டிராவிட்டால் அவள் மீது விருப்பம் கொண்டே இருப்பார்; இவ்வாறு நாம் அவரைவிட்டுத் தீமையையும் மானக்கேடான செயல்களையும் திருப்பிவிட்டோம் - ஏனெனில் நிச்சயமாக அவர் நம் தூய்மையான அடியார்களில் ஒருவராக இருந்தார்." (அல்குர்ஆன் 12:24).

இந்த நிகழ்வு, மனிதன் தனது உணர்வுகளை கட்டுப்படுத்தும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. பாரம்பரிய இஸ்லாமிய அறிஞர்கள், பார்வையின் கட்டுப்பாடு மனிதனின் உள்ளார்ந்த தூய்மையுடன் நேரடியாக தொடர்புடையது எனக் குறிப்பிடுகின்றனர். தொடர்ந்து காம நோக்கத்துடன் பார்ப்பது நஃப்ஸ் மீது தாக்கத்தை ஏற்படுத்தி, பின்னர் அது நடத்தை வழியாக வெளிப்படக்கூடும் என்று அவர்கள் விளக்குகின்றனர் (Al-Ghazali, 2013).

எனவே, இஸ்லாமிய ஒழுக்கக் கட்டமைப்பு மனிதனை தனது பார்வையை கட்டுப்படுத்தவும், தவறான சூழல்களைத் தவிர்க்கவும் ஊக்குவிக்கிறது (Kamali, 2008). கண்களின் ஸினா என்பது ஒரு சாதாரண பார்வைச் செயல் அல்ல. அது பெரிய ஒழுக்க வீழ்ச்சிக்கான தொடக்கமாகக் கருதப்படுகிறது. அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் போதனைகள் மனிதனை தனது பார்வையை கட்டுப்படுத்தி தூய்மையான, ஒழுக்கமான வாழ்க்கையைப் பேணுமாறு வழிநடத்துகின்றன. இவ்வாறு சுயக்கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்வதன் மூலம் தனிநபர் தூய்மையும் சமூக ஒழுக்க நிலைத்தன்மையும் பாதுகாக்கப்படுகின்றன.

### *5.2 காதுகளின் ஸினா*

காதுகளின் ஸினா என்பது ஒழுக்கத்திற்கு முரணான பேச்சுகளை கேட்பது, ஆசையைத் தூண்டும் உரையாடல்களில் ஈடுபடுவது, அல்லது காம உணர்வுகளை ஊக்குவிக்கும் இசை, கதைகள் மற்றும் ஊடக உள்ளடக்கங்களை செவிமடுப்பது ஆகியவற்றைக் குறிக்கிறது. இஸ்லாமிய போதனைகளில் இது ஒரு முக்கியமான ஒழுக்கக் கவலைக்குரிய நிலையாகக் கருதப்படுகிறது. காரணம், மனிதன் கேட்கும் விடயங்கள் அவனுடைய மனநிலையை நேரடியாகப் பாதித்து, எண்ணங்களையும் ஆசைகளையும் உருவாக்கக்கூடியவை. நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இதனை தெளிவாக விளக்கியுள்ளனர்: "காதுகளின் ஸினா என்பது (காமத்தைத் தூண்டும்) பேச்சுகளையோ பாடல்களையோ கேட்பதாகும்…" (Riyad as-Salihin, Book 17: Hadith 1622). இந்த ஹதீஸ், ஒழுக்கமற்ற ஒலி உள்ளீடுகள் மனிதனின் உள்ளார்ந்த சிந்தனையை பாதித்து, மெதுவாக அவனை தவறான செயல்களுக்கு இட்டுச் செல்லக்கூடும் என்பதை உணர்த்துகிறது.

அல்குர்ஆனும் விசுவாசிகளை பயனற்ற மற்றும் தீங்கு விளைவிக்கும் பேச்சுகளிலிருந்து விலகுமாறு அறிவுறுத்துகிறது:

> "அன்றியும், இவர்கள் வீணானதைச் செவியுற்றால், அதைப் புறக்கணித்து: "எங்களுக்கு எங்கள் அமல்கள்; உங்களுக்கு உங்கள் அமல்கள்; ஸலாமுன் அலைக்கும் (உங்களுக்குச் சாந்தி உண்டாகுக!) அறியாமைக்காரர்களை நாங்கள் விரும்புவதில்லை" என்று கூறுவார்கள்." (அல்குர்ஆன் 28:55).

இந்த வசனம், மனிதன் தனது செவிப்புலனை எந்த வகையான உள்ளடக்கத்தை நோக்கித் திறக்க வேண்டும் என்பதில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஒருவர் கேட்பது அவரது சிந்தனையை வடிவமைக்கிறது; சிந்தனை பின்னர் நடத்தையாக மாறுகிறது. இஸ்லாமிய அறிஞர்கள் காதுகளை "ஒழுக்க உருவாக்கத்தின் நுழைவாயில்" எனக் குறிப்பிடுகின்றனர். ஒருவர் தொடர்ந்து காமத்தைத் தூண்டும் பேச்சுகள், வதந்திகள் அல்லது ஒழுக்கமற்ற கதைகளை கேட்பது, அவரது உள்ளார்ந்த ஆசைகளை வளர்க்கும் என்று அவர்கள்

விளக்குகின்றனர் (Al-Qaradawi, 1995). எனவே, காதுகளின் ஸினா என்பது ஒரு சாதாரண கேள்வி செயலல்ல; அது ஒழுக்க வீழ்ச்சியின் ஆரம்ப கட்டமாகும்.

வரலாற்று ரீதியாக, நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் காலத்தில் பொய்யான பேச்சுகள், பின்னால் பேசுதல், வதந்திகள் மற்றும் ஆசையைத் தூண்டும் கவிதைகள் போன்றவை சமூக ஒழுக்கத்தை பாதிக்கும் காரணிகளாகக் கருதப்பட்டன. இதனால் முஸ்லிம் சமூகத்தில் "எதை கேட்க வேண்டும், எதை தவிர்க்க வேண்டும்" என்ற ஒழுக்கக் கட்டுப்பாடு மிக முக்கியமாக வலியுறுத்தப்பட்டது. அதேபோல், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் நற்பண்புகளைப் பற்றி கூறும்போது, செவிப்புலனைக் கட்டுப்படுத்துவதும் முக்கியமான ஒழுக்கப் பண்பாகக் குறிப்பிட்டுள்ளனர். இது மனிதனின் நாவு, பார்வை மற்றும் கேள்வி அனைத்தும் ஒருங்கிணைந்த ஒழுக்க அமைப்பின் பகுதிகள் என்பதை காட்டுகிறது.

நவீன காலத்தில், காதுகளின் ஸினா பல புதிய வடிவங்களில் காணப்படுகிறது. குறிப்பாக வலையொலி (Podcasts), இசை, சமூக ஊடக வீடியோக்கள் மற்றும் நிகழ்வோடை தளங்களில் (Streaming Platforms) உள்ள உரையாடல்கள் சில நேரங்களில் காம உணர்வுகளைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன. தினசரி வாழ்க்கையில் ஒருவர் தொடர்ந்து இத்தகைய உள்ளடக்கங்களை கேட்கும்போது, அது மனதில் ஆசைகளை உருவாக்கி, ஒழுக்கக் கட்டுப்பாட்டை மெதுவாக பலவீனப்படுத்தக்கூடும் (Esposito, 2011). சமகால ஆய்வுகள், இத்தகைய ஒலி உள்ளடக்கங்கள் மனிதனின் சிந்தனை முறையையும் உறவு அணுகுமுறையையும் மாற்றக்கூடியவை எனக் குறிப்பிடுகின்றன. குறிப்பாக டிஜிட்டல் தளங்களில் பரிந்துரைக்கப்படும் உள்ளடக்கங்கள் (algorithms) மனிதனை தொடர்ந்து அதே வகை உள்ளடக்கங்களுக்கு இட்டுச் செல்லும் நிலையை உருவாக்குகின்றன (Nasr, 2002).

இஸ்லாம் இதனைத் தடுப்பதற்காக, நல்ல மற்றும் பயனுள்ள ஒலிகளால் செவியை நிரப்புமாறு அறிவுறுத்துகிறது. அல்குர்ஆன் ஓதுதல், இஸ்லாமிய கல்வி உரைகள், திக்ர் மற்றும் நல்ல உரையாடல்கள் போன்றவை காதுகளைத் தூய்மைப்படுத்தும் வழிகளாகக் கருதப்படுகின்றன. இதன் மூலம், மனிதன் தனது செவிப்புலனை ஒரு ஒழுக்கப் பாதுகாப்பு கருவியாக மாற்றிக்கொள்ள முடியும். தீங்கு விளைவிக்கும் ஒலி உள்ளீடுகளைத் தவிர்க்கும்போது, மனதின் தூய்மை பாதுகாக்கப்பட்டு, ஒழுக்கமான வாழ்க்கை நிலைநிறுத்தப்படுகிறது.

### 5.3 நாவின் ஸினா

நாவின் ஸினா என்பது மனிதன் தனது நாவை தவறான முறையில் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. அதாவது, ஒழுக்கத்துக்கு முரணான, காமத்தைத் தூண்டும், பொய்யான அல்லது பிறரைப் புண்படுத்தும் வகையிலான பேச்சுகளைப் பேசுதல், அல்லது அத்தகைய

உரையாடல்களில் ஈடுபடுதல் ஆகியவை இதில் அடங்கும். இஸ்லாமிய போதனைகளின் படி, மனிதனின் பேச்சு அவனுடைய உள்ளார்ந்த சிந்தனையும் ஒழுக்க நிலையும் பிரதிபலிப்பதாகக் கருதப்படுகிறது. எனவே நாவின் தவறான பயன்பாடு, படிப்படியாக பெரிய ஒழுக்க வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் ஆரம்பக் கட்டமாக விளக்கப்படுகிறது.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் நாவின் தவறான பயன்பாட்டை தெளிவாக எச்சரித்துள்ளனர். அவர்களின் போதனையில், காமத்தைத் தூண்டும் அல்லது ஒழுக்கத்தை குலைக்கும் பேச்சுகள் "நாவின் ஸினா" எனக் குறிப்பிடப்படுகின்றன (Riyad as-Salihin, Book 17: Hadith 1622). இதன் மூலம், சொற்கள் வெறும் தொடர்பு கருவி மட்டுமல்ல; அவை மனிதனின் ஒழுக்கத்தை உயர்த்தவோ அல்லது வீழ்த்தவோ முடியும் என்பதையும் இஸ்லாம் வலியுறுத்துகிறது.

அல்குர்ஆனும் விசுவாசிகளை நேர்மையான மற்றும் பொறுப்புள்ள பேச்சைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்துகிறது:

> "ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; (எந்நிலையிலும்) நேர்மையான சொல்லையே சொல்லுங்கள்." (அல்குர்ஆன் 33:70).

இந்த வசனம், மனிதன் பேசும் ஒவ்வொரு சொல்லும் ஒழுக்கப் பொறுப்புடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை உணர்த்துகிறது. தவறான பேச்சுகள் மனிதனை பாவத்திற்கு நெருங்கச் செய்யக்கூடும்; அதே நேரத்தில் நல்ல சொற்கள் சமூக ஒற்றுமையையும் அமைதியையும் வளர்க்கும்.

இஸ்லாமிய அறிஞர்கள் நாவை "மனிதனின் ஒழுக்கத்தின் பிரதிபலிப்பு" எனக் குறிப்பிடுகின்றனர். ஒருவர் தொடர்ந்து காமத்தைத் தூண்டும் உரையாடல்கள், வதந்திகள் அல்லது பிறரைப் பற்றிய தவறான பேச்சுகளில் ஈடுபடும்போது, அது அவரது உள்ளார்ந்த ஆசைகளை வளர்த்து, பின்னர் நடத்தையிலும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என்று அவர்கள் விளக்குகின்றனர் (Al-Qaradawi, 1995). வரலாற்று ரீதியாகவும், நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் காலத்தில் பொய் பேசுதல், பின்னால் பேசுதல், மற்றும் தேவையற்ற உரையாடல்கள் போன்றவை சமூக ஒழுக்கத்தை பாதிக்கும் காரணிகளாகக் கருதப்பட்டன. இதனால் முஸ்லிம் சமூகத்தில் "எதைப் பேச வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும்" என்ற ஒழுக்கக் கட்டுப்பாடு மிக முக்கியமாக வலியுறுத்தப்பட்டது.

நவீன காலத்தில், நாவின் ஸினா புதிய வடிவங்களில் வெளிப்படுகிறது. குறிப்பாக சமூக ஊடகங்கள், குறுஞ்செய்தி செயலிகள் மற்றும் இணையவழி உரையாடல்களில், காமத்தைத்

தூண்டும் வார்த்தைகள், மறைமுகமான காதல் சரசமாடுதல் மற்றும் ஒழுக்க வரம்புகளை மீறும் உரையாடல்கள் அதிகரித்துள்ளன. இவை ஆரம்பத்தில் சாதாரணமாகத் தோன்றினாலும், படிப்படியாக உணர்ச்சி பிணைப்புகளையும் தவறான உறவுகளையும் உருவாக்கக்கூடும்.

இஸ்லாம் இதனைத் தடுப்பதற்காக பேச்சை கட்டுப்படுத்துதல், தேவையற்ற உரையாடல்களைத் தவிர்த்தல் மற்றும் நல்ல சொற்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. மேலும், "ஒரு மனிதன் நல்லதைப் பேசட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும்" என்ற நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் போதனை, நாவின் ஒழுக்கக் கட்டுப்பாட்டின் அடிப்படைக் கோட்பாடாகும்.

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

> நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவரானாரோ, அவர் நல்ல வார்த்தைகளைப் பேசட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும். யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவரானாரோ, அவர் தனது அண்டைவரை (அண்டை மனிதரை) நன்றாக நடத்தட்டும். யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவரானாரோ, அவர் தனது விருந்தினருக்கு மரியாதை செலுத்தட்டும்." (Sahih Muslim, Book 1: Hadith 47a).

எனவே, நாவின் ஸினா என்பது வெறும் பேச்சு தவறு அல்ல; அது மனிதனின் உள்ளார்ந்த ஆசைகள் வெளிப்படும் ஒரு முக்கிய வாயிலாகும். எனவே, நாவை சரியாகக் கட்டுப்படுத்துவது தனிநபர் ஒழுக்கத்தையும் சமூக நலனையும் பாதுகாக்கும் முக்கியமான இஸ்லாமிய வழிகாட்டுதலாகும்.

### 5.4 கைகளின் ஸினா

கைகளின் ஸினா என்பது மஹ்ரம் அல்லாத (திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்ட ஆனால் நெருங்கிய உறவினரல்லாத) ஆண்-பெண் இடையே நிகழும் தேவையற்ற அல்லது ஒழுக்க வரம்புகளை மீறும் உடல் தொடுதலைக் குறிக்கிறது. இஸ்லாமிய போதனைகளின் படி, இத்தகைய தொடுதல் மனிதனின் உணர்வுகளைத் தூண்டி, நெருக்கத்தையும் ஆசையையும் அதிகரிக்கக்கூடியதாக இருப்பதால், அது விபச்சாரம் எனும் பெரிய பாவத்திற்குச் செல்லும் ஆரம்ப நிலையாகக் கருதப்படுகிறது.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இதனை தெளிவாக எச்சரித்துள்ளனர்: "கைகளின் ஸினா என்பது (காம நோக்கத்துடன்) தொடுவதாகும்…" (Riyad as-Salihin, Book 17: Hadith 1622). இந்த ஹதீஸ் மூலம், இஸ்லாம் உடல் தொடுதலை சாதாரண செயல் எனக் கருதவில்லை என்பது

தெளிவாகிறது. தவறான நோக்கத்துடன் நிகழும் சிறிய தொடுதலும் கூட, மனிதனை படிப்படியாக பாவத்தின் பக்கம் இட்டுச் செல்லக்கூடும் என்பதை இது உணர்த்துகிறது. இஸ்லாமிய அறிஞர்களின் கூற்றுப்படி, மனிதனின் செயல்களை வெளிப்படுத்தும் முக்கிய உறுப்புகளில் கைகள் முக்கியமானவை. அவை நல்ல செயல்களுக்கும் பயன்படலாம்; அதே நேரத்தில் தவறான தொடர்புகள் மற்றும் ஒழுக்க மீறல்களுக்கும் காரணமாகவும் இருக்கலாம். எனவே, கைகளை கட்டுப்படுத்துவது ஒழுக்கமான வாழ்க்கையின் அடிப்படை அம்சமாகக் கருதப்படுகிறது (Al-Qaradawi, 1995).

அல்குர்ஆன் சமூக ஒழுக்கத்தைப் பாதுகாக்க தெளிவான வழிகாட்டுதல்களை வழங்குகிறது. குறிப்பாக, ஆண்-பெண் இடையிலான நடத்தை மற்றும் உடைமுறைகளில் அடக்கமும் மரியாதையும் இருக்க வேண்டும் என்று அது வலியுறுத்துகிறது. இதன் நோக்கம் சமூகத்தில் தேவையற்ற ஈர்ப்புகள் மற்றும் தவறான உறவுகள் உருவாகாமல் தடுப்பதாகும்.

> “இன்னும்; முஃமினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக: அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்; தங்கள் அழகலங்காரத்தை அதினின்று (சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர (வேறு எதையும்) வெளிக் காட்டலாகாது; இன்னும் தங்கள் முன்றானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும்; மேலும், (முஃமினான பெண்கள்) தம் கணவர்கள், அல்லது தம் தந்தையர்கள், அல்லது தம் கணவர்களின் தந்தையர்கள் அல்லது தம் புதல்வர்கள் அல்லது தம் கணவர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரர்கள் அல்லது தம் சகோதரர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரிகளின் புதல்வர்கள், அல்லது தங்கள் பெண்கள், அல்லது தம் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள், அல்லது ஆடவர்களில் தம்மை அண்டி வாழும் (பெண்களை விரும்ப முடியாத அளவு வயதானவர்கள்) பெண்களின் மறைவான அங்கங்களைப் பற்றி அறிந்து கொள்ளாத சிறுவர்கள் ஆகிய இவர்களைத் தவிர, (வேறு ஆண்களுக்குத்) தங்களுடைய அழகலங்காரத்தை வெளிப்படுத்தக் கூடாது; மேலும், தாங்கள் மறைத்து வைக்கும் அழகலங்காரத்திலிருந்து வெளிப்படுமாறு தங்கள் கால்களை (பூமியில்) தட்டி நடக்க வேண்டாம்; மேலும், முஃமின்களே! (இதில் உங்களிடம் ஏதேனும் தவறு நேரிட்டிருப்பின்,) நீங்கள் தவ்பா செய்து (பிழை பொறுக்கத் தேடி), நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்.” (அல்குர்ஆன் 24:31).

வரலாற்று ரீதியாக, நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் காலத்தில் மஹ்ரம் அல்லாத ஆண்-பெண் இடையே தேவையற்ற உடல் தொடர்புகள் தவிர்க்கப்பட்டன. கை குலுக்குதல், அணைப்பு போன்றவை கூட ஒழுக்கச் சிக்கல்களை உருவாக்கக்கூடிய சூழ்நிலைகளாகக் கருதப்பட்டதால் அவை கட்டுப்படுத்தப்பட்டன. இதன் மூலம் இஸ்லாம் சமூகத்தில் தூய்மையான மற்றும் மரியாதையான உறவுகளை நிலைநிறுத்த முயன்றது. நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மேலும் கடுமையாக எச்சரித்துள்ளனர்:

முஃகில் இப்னு யஸார் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

> நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் ஒருவரின் தலையில் இரும்பு ஊசி கொண்டு குத்தப்படுவது, அவனுக்குச் சட்டபூர்வமல்லாத ஒரு பெண்ணைத் தொடுவதைக் காட்டிலும் அவனுக்குச் சிறந்ததாகும்." (Al-Tabarani, Sahih al-Jami‘ 5045).

இந்த ஹதீஸ், வெளிப்படையாகச் சிறியதாகத் தோன்றும் தவறான தொடுதலும் இஸ்லாமிய ஒழுக்கத்தில் எவ்வளவு தீவிரமாகக் கருதப்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. இன்றைய காலத்தில், கைகளின் ஸினா பல்வேறு புதிய வடிவங்களில் காணப்படுகிறது. உதாரணமாக, வேலை இடங்களில் தேவையற்ற கை குலுக்கல்கள், நீண்ட நேர உடல் தொடுதல்கள், தோளில் தட்டுதல், சமூக நிகழ்வுகளில் அணைப்பு போன்றவை ஆரம்பத்தில் சாதாரணமாகத் தோன்றினாலும், அவை படிப்படியாக உணர்ச்சி நெருக்கத்தை உருவாக்கக்கூடும். இதன் மூலம் தவறான உறவுகளுக்கான வாய்ப்புகள் உருவாகலாம் (Esposito, 2011). சமகால ஆய்வுகள், கலப்பு பாலின சூழல்கள் மற்றும் உலகமயமாக்கல் காரணமாக இத்தகைய உடல் தொடர்புகள் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடுகின்றன. சில சமூகங்களில் சாதாரணமாகக் கருதப்படும் இச்செயல்கள், இஸ்லாமிய ஒழுக்க எல்லைகளை மெதுவாக பலவீனப்படுத்தக்கூடும் (Kamali, 2008).

இஸ்லாம் இதனைத் தடுப்பதற்காக தெளிவான ஒழுக்க எல்லைகளை நிர்ணயிக்கிறது. தேவையற்ற உடல் தொடர்புகளைத் தவிர்த்து, மரியாதையான வாய்மொழி வாழ்த்துகளைப் பயன்படுத்துவது சிறந்த மாற்றாகக் கருதப்படுகிறது. மேலும், சமூக தொடர்புகளில் தூய்மையும் கட்டுப்பாடும் பேணப்பட வேண்டும் என்று அல்குர்ஆன் வழிகாட்டுகிறது.

> "நபியின் மனைவிகளே! நீங்கள் பெண்களில் மற்றப் பெண்களைப் போலல்ல; நீங்கள் இறையச்சத்தோடு இருக்க விரும்பினால், (அந்நியருடன் நடத்தும்) பேச்சில் நளினம் காட்டாதீர்கள். ஏனெனில் எவன் உள்ளத்தில் நோய் (தவறான

நோக்கம்) இருக்கின்றதோ, அ(த்தகைய)வன் ஆசை கொள்வான்; இன்னும் நீங்கள் நல்ல பேச்சே பேசுங்கள்.'' (அல்குர்ஆன் 33:32).

நடைமுறையில், பாலினங்களுக்கு இடையே சரியான எல்லைகளைப் பேணுதல், தேவையற்ற உடல் தொடர்புகளைத் தவிர்த்தல், மற்றும் ஒழுக்க விழிப்புணர்வை வளர்த்தல் போன்றவை இதை நடைமுறைப்படுத்த உதவுகின்றன. குடும்பம் மற்றும் கல்வி சூழல்களில் இத்தகைய ஒழுக்க எல்லைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் மிகவும் அவசியமானதாகும்.

எனவே, கைகளின் ஸினா என்பது ஒரு சாதாரண உடல் தொடுதல் அல்ல. அது மனிதனின் உணர்வுகள் மற்றும் உறவுகளை தவறான திசையில் இட்டுச் செல்லக்கூடிய ஆரம்ப நிலையாகும். இஸ்லாம் கைகளை கட்டுப்படுத்துவதன் மூலம் மனிதனை பெரிய பாவங்களிலிருந்து பாதுகாக்கும் ஒரு முழுமையான ஒழுக்கக் கட்டமைப்பை வழங்குகிறது. இதன் மூலம் தனிநபர் தூய்மையும் சமூக மரியாதையும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

### 5.5 கால்களின் ஸினா

கால்களின் ஸினா என்பது மனிதன் தனது கால்களைப் பயன்படுத்தி, ஒழுக்கத்துக்கு முரணான இடங்களுக்கும் சூழல்களுக்கும் செல்வதை குறிக்கிறது. இஸ்லாமிய ஒழுக்கக் கட்டமைப்பில் இது மிகவும் முக்கியமான ஒரு கருத்தாகும். காரணம், மனிதன் எந்த இடத்திற்குச் செல்கிறான் என்பது அவனது சிந்தனை, நடத்தை மற்றும் இறுதியில் அவனது வாழ்க்கை ஒழுக்கத்தையும் தீர்மானிக்கிறது. அதாவது, பாவம் நடைபெறும் இடங்கள், காமத்தைத் தூண்டும் சந்திப்புகள், அல்லது ஒழுக்கக் கட்டுப்பாடுகள் இல்லாத சூழல்கள் ஆகியவற்றை நோக்கி ஒருவர் வேண்டுமென்றே செல்லுதல் இதன் பொருளாகும். இது தற்செயலான நடையாக அல்ல; மனிதனின் நோக்கம் மற்றும் உள்ளார்ந்த விருப்பத்தின் வெளிப்பாடாகும்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இதனை தெளிவாக எச்சரித்துள்ளனர்: ''கால்களின் ஸினா என்பது (விபச்சாரம் நடைபெறும் இடத்திற்குச் செல்லும் நோக்கத்துடன்) நடப்பதாகும்…'' (Riyad as-Salihin, Book 17: Hadith 162). இந்த ஹதீஸ், மனிதனின் சிறிய உடல் இயக்கங்கள்கூட ஒழுக்கப் பொறுப்புடன் தொடர்புடையவை என்பதை வலியுறுத்துகிறது. ஒரு தவறான இடத்திற்குச் செல்லும் ''ஒரு படி'' கூட, பெரிய பாவங்களுக்கு வழிவகுக்கும் தொடக்கமாக மாறக்கூடும்.

அல்குர்ஆனும் இதனை மிகவும் கடுமையாக எச்சரிக்கிறது:

> ''நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும், (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது.'' (அல்குர்ஆன் 17:32).

இங்கு "அருகிலும் செல்லாதீர்கள்" என்ற சொல் முக்கியமானதாகும். இது பாவத்தைச் செய்வதை மட்டும் அல்லாமல், அதற்குச் செல்லும் எல்லா சூழல்கள், வாய்ப்புகள் மற்றும் வழிகளையும் தவிர்க்க வேண்டும் என்பதை குறிக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய அறிஞர்கள் இதனை "தடுப்பு ஒழுக்கம்" (preventive ethics) என விளக்குகின்றனர் (Ibn Kathir, 2000).

இஸ்லாமிய அறிஞர்களின் பார்வையில், மனிதனின் கால்கள் வெறும் உடல் உறுப்புகள் அல்ல; அவை அவனது வாழ்க்கைப் பாதையை நிர்ணயிக்கும் கருவிகளாகும். நல்ல இடங்களுக்கு செல்லும் போது அவை நன்மையை உருவாக்கும்; தவறான இடங்களுக்கு செல்லும் போது அவை பாவத்திற்கான வாயிலாக மாறக்கூடும் (Al-Qaradawi, 1995). எனவே, கால்களின் இயக்கம் மனிதனின் ஒழுக்க நிலையை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய அடையாளமாகும்.

உளவியல் ரீதியாக பார்த்தால், மனிதன் செல்லும் இடங்கள் அவனது மனநிலையை நேரடியாக பாதிக்கின்றன. தொடர்ந்து தவறான சூழல்களுக்கு செல்லுதல், மெதுவாக அந்த சூழலை "சாதாரணம்" என ஏற்றுக்கொள்ளச் செய்து, உள்ளார்ந்த ஒழுக்க உணர்வை மங்கச் செய்யக்கூடும். இஸ்லாமிய அறிஞர்கள் இதனை நஃப்ஸ் மற்றும் ஷைத்தானின் படிப்படியான தூண்டுதல் என விளக்குகின்றனர்.

வரலாற்றில், நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் காலத்தில் முஸ்லிம்கள் பாவச் சூழல்களைத் தவிர்க்குமாறு வலியுறுத்தப்பட்டனர். மது அருந்தும் இடங்கள், ஒழுக்கமற்ற கூடங்கள், சந்தேகமான சமூக சந்திப்புகள் போன்ற இடங்களுக்கு செல்லாமல் இருக்க அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். காரணம், அந்த இடங்களுக்கு செல்லும் ஒவ்வொரு படியும் மனிதனை படிப்படியாக பாவத்திற்குள் இழுக்கக்கூடும் என்பதுதான். இமாம் அல்-கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் மனிதன் தனது கால்களை நன்மைக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறார். மஸ்ஜிதுக்கு செல்வது, கல்வி கற்கச் செல்வது, நோயாளிகளைப் பார்க்கச் செல்வது, சமூக சேவையில் ஈடுபடுவது போன்றவை கால்களின் உயர்ந்த பயன்பாடுகள் என அவர் குறிப்பிடுகிறார். இதன் மூலம் மனிதனின் இயக்கம் வணக்கமாகவும் மாற முடியும்.

அபூ பர்ஸா அல்-அஸ்லமி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

> நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "கியாமத் நாளில் அல்லாஹ்வின் அடியாரின் கால்கள் நகராது; ஐந்து விஷயங்கள் குறித்து அவன் விசாரிக்கப்படும் வரை: அவனது வாழ்நாளைப் பற்றி - அதை எவ்வாறு கழித்தான் என்பதைக் குறித்து; அவனது அறிவைப் பற்றி - அதன் அடிப்படையில் அவன் என்ன செயல்களைச் செய்தான் என்பதைக் குறித்து; அவனது செல்வத்தைப் பற்றி -

> அதை எவ்வாறு சம்பாதித்தான் என்பதையும், அதை எங்கு செலவிட்டான் என்பதையும் குறித்து; அவனது உடலைப் பற்றி - அதை எதற்காகச் செலவழித்து சோர்வடையச் செய்தான் என்பதைக் குறித்து." (Jami` at-Tirmidhi, Book 37: Hadith 2417).

இதன் மூலம், மனிதனின் ஒவ்வொரு பயணமும் இறைவனிடம் பொறுப்புக்குரியதாகும் என்பது தெளிவாகிறது. இன்றைய காலத்தில், கால்களின் ஸினா பல நவீன வடிவங்களில் வெளிப்படுகிறது. உதாரணமாக, மது விருந்து நடைபெறும் இடங்களுக்கு செல்வது, இரவு நேர கேளிக்கை விடுதிகள், கட்டுப்பாடற்ற சமூக நிகழ்வுகள் அல்லது காதலர் சந்திப்புகளுக்காக (Dating meeting/களவளாவல்) திட்டமிட்டு செல்வது போன்றவை இதில் அடங்கும். சில சமயங்களில், "சாதாரண சந்திப்பு" என தொடங்கும் ஒரு பயணம் கூட பின்னர் ஒழுக்க எல்லைகளை மீறும் நிலைக்கு இட்டுச் செல்லக்கூடும் (Esposito, 2011).

நவீன ஆய்வுகள், நகர வாழ்க்கை, உலகமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இத்தகைய அபாயங்கள் அதிகரித்துள்ளன எனக் குறிப்பிடுகின்றன. குறிப்பாக பயணப் பகிர்வு (Ride-sharing) போன்ற வசதிகள், ஒருவருக்கு எந்த இடத்திற்கும் எளிதாகச் செல்லும் வாய்ப்பை வழங்குவதால், தவறான சூழல்களுக்குச் செல்லும் அபாயமும் அதிகரித்துள்ளது (Kamali, 2008). அதேபோல், சமூக ஊடகங்கள் மற்றும் நண்பர்கள் வட்டம் வழியாக வரும் அழைப்புகள் மனிதனை படிப்படியாக தவறான சூழல்களுக்குள் இழுக்கக்கூடும். ஒரே இடத்துக்கு மீண்டும் மீண்டும் செல்லும் பழக்கம், அந்த சூழலை "இயல்பானது" என உணரச் செய்து, ஒழுக்க எல்லைகளை மெதுவாக தளர்த்தக்கூடும் (Nasr, 2002).

இஸ்லாம் இதனைத் தடுப்பதற்காக மனிதன் தனது இயக்கத்தை நன்மை நோக்கமாக மாற்ற வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. மஸ்ஜிதுக்கு நடந்து செல்வது, கல்வி நிகழ்வுகளில் பங்கேற்பது, சமூக நலச் செயல்களில் ஈடுபடுவது போன்றவை கால்களை நன்மைக்காக பயன்படுத்தும் வழிகளாகும்.

அல்குர்ஆன் கூறுகிறது:

> "(நபியே!) நீர் சொல்வீராக: "நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது; எவன் தன்னுடைய இறைவனைச் சந்திக்கலாமென ஆதரவு வைக்கின்றானோ அவன் (ஸாலிஹான) நல்ல

செயல்களைச் செய்து, தன் இறைவனை வணங்குவதில் வேறெவரையும் இணையாக்காதும் இருப்பானாக." (அல்குர்ஆன் 18:110).

இதன் மூலம், மனிதனின் இயக்கமே ஒரு வணக்கமாக மாற முடியும் என்பது தெளிவாகிறது. எனவே, கால்களின் ஸினா என்பது வெறும் நடப்பது அல்ல; அது மனிதனின் வாழ்க்கைத் திசையை நிர்ணயிக்கும் ஒரு ஆழமான ஒழுக்கக் கருத்தாகும். மனிதன் எடுக்கும் ஒவ்வொரு படியும் அவனை நன்மை அல்லது பாவம் என இரண்டு பாதைகளில் ஒன்றுக்கு அழைத்துச் செல்லும். எனவே, விழிப்புணர்வுடன் சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் மனிதன் தன்னைப் பாதுகாத்து, தூய்மையான, ஒழுக்கமான மற்றும் இறையச்சம் நிறைந்த வாழ்க்கையை உருவாக்க முடியும்.

### *5.6* இதயத்தின் ஸினா

இதயத்தின் ஸினா என்பது மனிதனின் உள்ளத்தில் உருவாகும் தவறான ஆசைகள், ஒழுக்கத்துக்கு முரணான கற்பனைகள், சட்டவிரோதமான எண்ணங்கள் மற்றும் அந்நிய ஆண் அல்லது பெண்ணை நோக்கிய உணர்ச்சி ஈர்ப்புகளைக் குறிக்கிறது. இது வெளியில் தெரியாத ஒரு உள்மன நிலையாக இருந்தாலும், இஸ்லாமிய போதனைகளில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில், மனிதன் செய்யும் பெரும்பாலான பாவங்கள் முதலில் ஒரு எண்ணமாக இதயத்தில் தோன்றி, பின்னர் பேச்சாகவும் செயலாகவும் மாறுகின்றன.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இதனை தெளிவாக விளக்கியுள்ளனர்: "இதயம் ஆசைப்படுகிறது மற்றும் விரும்புகிறது; பின்னர் உடல் உறுப்புகள் அதை செயலாக உறுதிப்படுத்துகின்றன அல்லது மறுக்கின்றன." (Riyad as-Salihin, Book 17: Hadith 1622). இந்த ஹதீஸ் மூலம், பெரிய பாவங்கள் திடீரென நிகழ்வதில்லை என்பது தெளிவாகிறது. அவை முதலில் இதயத்தில் ஒரு சிறிய ஆசையாக தொடங்கி, அது மீண்டும் மீண்டும் சிந்திக்கப்படும் போது விருப்பமாக மாறுகிறது; பின்னர் அந்த விருப்பம் ஆசையாக வளர்ந்து, இறுதியில் செயலாக மாறக்கூடும்.

இஸ்லாமிய அறிஞர்கள் இதயத்தை மனிதனின் ஆன்மீக வாழ்க்கையின் மையமாகக் கருதுகின்றனர். நம்பிக்கை, இறையச்சம், நல்ல நோக்கம், அன்பு போன்ற நல்ல பண்புகளும் இதயத்திலிருந்தே உருவாகின்றன. அதேபோல் பொறாமை, வெறுப்பு, தவறான ஆசைகள் போன்ற தீய உணர்வுகளும் இதயத்திலிருந்தே தோன்றுகின்றன. எனவே இதயம் சுத்தமாக இருந்தால் மனிதனின் வாழ்க்கையும் சுத்தமாக இருக்கும் (Al-Qaradawi, 1995). அல்குர்ஆன் மனிதனின் வெளிப்படையான செயல்கள் மட்டுமல்ல, உள்ளத்தில் இருக்கும் எண்ணங்களையும் அல்லாஹ் நன்கு அறிந்திருப்பதாக கூறுகிறது:

> "மேலும், உங்கள் சொல்லை நீங்கள் இரகசியமாக்குங்கள்; அல்லது அதை பகிரங்கமாக்குங்கள் - நிச்சயமாக அவன் இதயங்களிலுள்ளவற்றையும் மிக அறிந்தவன்." (அல்குர்ஆன் 67:13).

இந்த வசனம் மனிதன் தனது வெளிப்புற நடத்தை மட்டுமல்ல, உள்ளார்ந்த எண்ணங்களையும் சுத்தப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது (Ibn Kathir, 2000). உண்மையில், கண்களின் ஸினா, காதுகளின் ஸினா, நாவின் ஸினா, கைகளின் ஸினா மற்றும் கால்களின் ஸினா ஆகிய அனைத்திற்கும் அடிப்படை காரணமாக இருப்பது இதயத்தின் ஸினா ஆகும். ஒருவர் தொடர்ந்து தவறான எண்ணங்களை வளர்த்துக் கொண்டால், அது பார்வை, பேச்சு, தொடர்பு மற்றும் செயலாக மாறக்கூடும். எனவே இஸ்லாம் பாவத்தை அதன் ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த இதயத்தைப் பாதுகாக்க வலியுறுத்துகிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக நபி யூசுப் (அலை) அவர்களின் நிகழ்வு குறிப்பிடப்படுகிறது. ஜுலைக்கா அவரை தவறான செயலுக்கு அழைத்தபோது, நபி யூசுப் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் நினைவில் உறுதியாக இருந்து அந்த சோதனையை வெற்றிகரமாகத் தவிர்த்தார்.

அல்குர்ஆன் கூறுகிறது:

> "ஆனால் அவளோ அவரைத் திடமாக விரும்பினாள்; அவரும் தம் இறைவனின் ஆதாரத்தைக் கண்டிராவிட்டால் அவள் மீது விருப்பம் கொண்டே இருப்பார்; இவ்வாறு நாம் அவரைவிட்டுத் தீமையையும் மானக்கேடான செயல்களையும் திருப்பிவிட்டோம் - ஏனெனில் நிச்சயமாக அவர் நம் தூய்மையான அடியார்களில் ஒருவராக இருந்தார்." (அல்குர்ஆன் 12:24).

இந்த நிகழ்வு, இதயத்தை இறைநினைவுடன் வைத்திருப்பது மனிதனை பெரிய சோதனைகளிலிருந்து பாதுகாக்கும் என்பதை காட்டுகிறது.

நுஃமான் இப்னு பஷீர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

> நான் அல்லாஹ்வின் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறுவதைக் கேட்டேன்: "நிச்சயமாக ஹலால் (அனுமதிக்கப்பட்டவை) தெளிவானவை; ஹராம் (தடைசெய்யப்பட்டவை) தெளிவானவை. இவ்விரண்டிற்கும் இடையில் சந்தேகத்திற்குரிய சில விடயங்கள் உள்ளன. அவற்றைப் பற்றி பெரும்பாலான மக்கள் அறியமாட்டார்கள். எனவே, யார் சந்தேகத்திற்குரிய விடயங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்கிறாரோ, அவர் தனது மார்க்கத்தையும் கண்ணியத்தையும் பாதுகாத்துக் கொண்டார். ஆனால் யார்

> சந்தேகத்திற்குரிய விடயங்களில் ஈடுபடுகிறாரோ, அவர் பாதுகாக்கப்பட்ட மேய்ச்சல் நிலத்திற்கு அருகில் தனது கால்நடைகளை மேய்க்கும் மேய்ப்பவரைப் போன்றவர்; அவை எந்த நேரத்திலும் அந்தத் தடை செய்யப்பட்ட பகுதியில் நுழைந்து விடக்கூடும். அறிந்துகொள்ளுங்கள்! ஒவ்வொரு அரசருக்கும் ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதி உண்டு. நிச்சயமாக அல்லாஹ்வின் பாதுகாக்கப்பட்ட பகுதி, அவன் தடைசெய்த காரியங்களாகும். மேலும் அறிந்துகொள்ளுங்கள்! மனித உடலில் ஒரு சிறிய மாமிசத் துண்டு உள்ளது. அது சீராக இருந்தால் முழு உடலும் சீராக இருக்கும்; அது கெட்டுப்போனால் முழு உடலும் கெட்டுப்போகும். அறிந்துகொள்ளுங்கள்! அதுவே இதயம்." (Sahih al-Bukhari, Book 2: Hadith 52).

இந்த ஹதீஸ் மனிதனின் முழு ஒழுக்க வாழ்க்கையும் இதயத்தின் நிலையையே சார்ந்தது என்பதை விளக்குகிறது. இன்றைய சமூகத்தில் இதயத்தின் ஸினா பல வடிவங்களில் காணப்படுகிறது. உதாரணமாக, சமூக ஊடகங்களில் ஒருவரை மீண்டும் மீண்டும் பார்ப்பது, அவரைப் பற்றிக் கற்பனை செய்வது, அல்லது மனதிற்குள் உணர்ச்சி ரீதியான உறவை உருவாக்குவது போன்றவை இதற்கு எடுத்துக்காட்டாகும். அதேபோல், வேலை இடங்களில் அல்லது கல்வி நிலையங்களில் ஒருவர்மீது ரகசிய ஈர்ப்பு வளர்வதும், ஆரம்பத்தில் சாதாரணமாகத் தோன்றினாலும், பின்னர் அது தீவிரமான உணர்ச்சி பிணைப்பாக மாறக்கூடும் (Esposito, 2011).

சமகால ஆய்வுகள், இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் மனிதர்களிடையே உணர்ச்சி நெருக்கத்தை அதிகரிக்கின்றன என்று கூறுகின்றன. உடல் சந்திப்பு இல்லாமலேயே நீண்டகால இணையவழி தொடர்புகள் உணர்ச்சி பிணைப்புகளாக மாறக்கூடும் (Kamali, 2008). மேலும் தனிமை, மன அழுத்தம் மற்றும் குடும்ப பிரச்சினைகள் போன்றவை மனிதனை தவறான கற்பனைகளுக்கு இட்டுச் செல்லக்கூடும். குறிப்பாக இளைஞர்கள் தற்காலிக ஈர்ப்புகளை உண்மையான காதலாக எண்ணும் நிலையும் காணப்படுகிறது (Nasr, 2002).

இதயத்தின் ஸினாவிலிருந்து பாதுகாப்பதற்காக இஸ்லாம் பல வழிமுறைகளை வழங்குகிறது. அவை: அல்லாஹ்வை நினைவு கூறுதல் (திக்ர்), தொழுகை, நோன்பு, அல்குர்ஆன் ஓதுதல், தவ்பா செய்தல் மற்றும் சுய பரிசோதனை செய்தல் ஆகியவையாகும்.

அல்குர்ஆன் கூறுகிறது:

> "தவிர, மானக் கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும், அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக்

*கொண்டாலும் உடனே அவர்கள் (மனப்பூர்வமாக) அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள்; அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும், அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் (பாவ) காரியங்களில் தரிபட்டிருந்து விடமாட்டார்கள்.*" (*அல்குர்ஆன்* 3:135).

*இமாம் அல்-கஸ்ஸாலி (ரஹ்) கூறுவதாவது, மனிதன் தினசரி தனது எண்ணங்களையும் நோக்கங்களையும் பரிசோதிப்பது (முஹாஸபா) இதயத்தை சுத்தமாக வைத்திருக்க உதவும் முக்கிய வழியாகும்* (Al-Ghazali, 2013).

*எனவே, இதயத்தின் ஸினா என்பது வெளியில் தெரியாத ஒரு உள்மன பாவமாக இருந்தாலும், அது மற்ற அனைத்து பாவங்களுக்கும் அடிப்படையாக அமைகிறது. எனவே இதயத்தை சுத்தமாக வைத்திருப்பது, பார்வை, பேச்சு மற்றும் செயல் அனைத்தையும் சுத்தமாக வைத்திருப்பதற்கான அடித்தளமாகும். இதன் மூலம் தனிநபரும் சமூகமும் ஒழுக்கமான மற்றும் அமைதியான வாழ்க்கையை அடைய முடியும்.*

### *5.7 உடல் ஸினா*

*உடல் ஸினா என்பது இஸ்லாமிய ஒழுக்கக் கட்டமைப்பில் மிகக் கடுமையான பாவமாகக் கருதப்படும் விபச்சாரத்தை* (zina) *குறிக்கிறது. இது திருமண உறவுக்கு வெளியே ஆண் மற்றும் பெண் இருவருக்கிடையில் நடைபெறும் சட்டவிரோதமான பாலியல் உறவாகும். இஸ்லாமிய பார்வையில், இது மனிதனின் ஒழுக்க வாழ்க்கையின் இறுதி மற்றும் மிக வெளிப்படையான மீறலாகும்.*

*இஸ்லாமிய போதனைகளின்படி, இந்த நிலை திடீரென உருவாகுவதில்லை. மாறாக, கண் பார்வை, சிந்தனை, உணர்ச்சி, பேச்சு, தொடுதல் மற்றும் நகர்வு போன்ற பல* "*ஸினா நிலைகள்*" *படிப்படியாக வளர்ந்து, இறுதியில் உடல் ஸினாவாக வெளிப்படுகிறது. அதனால் இதனை* "*ஒழுக்க வீழ்ச்சியின் உச்ச நிலை*" *என இஸ்லாமிய அறிஞர்கள் விளக்குகின்றனர்.*

*அல்குர்ஆன் இதனை மிகக் கடுமையாக எச்சரிக்கிறது:*

> "*நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும், (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது.*" (*அல்குர்ஆன்* 17:32).

இந்த வசனம் வெறும் விபச்சாரச் செயலைத் தடை செய்வதல்ல. அதற்கு வழிவகுக்கும் அனைத்து காரணிகளையும் (தவறான பார்வை, தனிமைச் சந்திப்பு, ஆசையைத் தூண்டும் சூழல்கள் மற்றும் வாய்ப்புகள்) தவிர்க்க வேண்டும் என்பதையும் தெளிவாகக் குறிப்பிடுகிறது (Ibn Kathir, 2000). நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்: "... இதற்கிடையில் இதயம் ஆசைப்படுகிறது மற்றும் விரும்புகிறது; பின்னர் தனிப்பட்ட உறுப்புகள் (உண்மையான செயலில் ஈடுபடுவதன் மூலம்) அதை உறுதிப்படுத்தவோ அல்லது அதை மறுக்கவோ செய்கின்றன." (Riyad as-Salihin, Book 17: Hadith 1622). இந்த ஹதீஸ், மனிதனின் உடல் செயல்கள் அனைத்தும் இதயத்தில் உருவாகும் ஆசைகளின் விளைவாகவே வெளிப்படுகின்றன என்பதை தெளிவுபடுத்துகிறது. அதாவது, உடல் ஸினா என்பது திடீரென நிகழும் செயல் அல்ல; அது நீண்ட உளவியல் மற்றும் உணர்ச்சி வளர்ச்சியின் இறுதி நிலையாகும்.

இஸ்லாமிய அறிஞர்கள், உடல் ஸினாவை தனிநபர் ஒழுக்கத்தையும் சமூக அமைப்பையும் சிதைக்கும் மிகப் பெரிய பாவமாகக் கருதுகின்றனர். இது குடும்ப உறவுகளை உடைக்கும், நம்பிக்கையை அழிக்கும் மற்றும் சமூகத்தில் ஒழுக்கக் குழப்பத்தை உருவாக்கும் (Al-Qaradawi, 1995). இஸ்லாமிய சட்டவியலில், உடல் ஸினா "ஹத் குற்றம்" ஆகும். இதற்கு கடுமையான சட்டத் தண்டனைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. திருமணமாகாதவர்களுக்கு சாட்டையடி தண்டனை, திருமணமானவர்களுக்கு ரஜம் (கல்லெறிதல்) போன்ற தண்டனைகள் குறிப்பிடப்படுகின்றன. இருப்பினும், இத்தண்டனைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு மிகக் கடுமையான சாட்சி நிபந்தனைகள் உள்ளன. இதன் முக்கிய நோக்கம் தண்டனை அல்ல; மாறாக சமூகத்தில் இச்செயல் நடைபெறாமல் தடுக்கும் ஒரு வலுவான ஒழுக்கக் கட்டுப்பாட்டை உருவாக்குவதாகும் (Kamali, 2008).

வரலாற்று ரீதியாக, நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் காலத்தில் விபச்சாரம் தொடர்பான வழக்குகள் மிகக் கடுமையான நீதிமுறைகளின் அடிப்படையில் விசாரிக்கப்பட்டன. சிலர் தாமாகவே தவறை ஒப்புக்கொண்டு தண்டனை பெற்ற நிகழ்வுகளும் ஹதீஸ்களில் காணப்படுகின்றன. இது இஸ்லாத்தில் தவ்பா (மன்னிப்பு கோருதல்) மற்றும் பொறுப்புணர்வின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. ஒரு நிகழ்வில், யூத தம்பதியர் தொடர்பான வழக்கில், தவ்ராத்தில் குறிப்பிடப்பட்ட ரஜம் தண்டனை இருப்பது உறுதி செய்யப்பட்டு, அதன்படி தண்டனை நிறைவேற்றப்பட்டதாக ஹதீஸ் குறிப்பிடுகிறது. இது விபச்சாரத்தின் தீவிரத்தன்மையை வரலாற்று ரீதியாகவும் உணர்த்துகிறது.

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

> "யூதர்கள் அல்லாஹ்வின் தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களிடம் வந்து, தங்களுள் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் விபச்சாரம் (சட்டவிரோத பாலியல் உறவு) செய்ததாகக் கூறினர். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவர்களிடம், "ரஜம் (கல்லெறிந்து தண்டனை வழங்குதல்) தொடர்பாக தவ்ராத்தில் நீங்கள் என்ன காண்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். அவர்கள் பதிலளித்தார்கள்: "நாங்கள் அவர்களை அவமானப்படுத்தி, கம்பியால் அடித்து தண்டிக்கிறோம்." அப்போது அப்துல்லாஹ் இப்னு சலாம் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் பொய் கூறுகிறீர்கள்; ரஜம் தண்டனை தவ்ராத்தில் உள்ளது." பின்னர் அவர்கள் தவ்ராத்தை கொண்டு வந்து திறந்தனர். அவர்களில் ஒருவர் ரஜம் குறித்த வசனத்தின் மீது தனது கையை வைத்து, அதற்கு முன்பும் பின்னரும் உள்ள பகுதிகளை வாசித்தார். இதைக் கண்ட அப்துல்லாஹ் இப்னு சலாம் (ரலி) அவர்கள், "உங்கள் கையை உயர்த்துங்கள்" என்று கூறினார்கள். அவர் கையை உயர்த்தியபோது, அதன் கீழ் ரஜம் குறித்த வசனம் தென்பட்டது. அப்போது அவர்கள், "ஓ முஹம்மத்! அவர் உண்மையைச் சொன்னார்; தவ்ராத்தில் ரஜம் தண்டனை உள்ளது" என்று கூறினார்கள். இதன் பின்னர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அந்த ஆண் மற்றும் பெண் மீது ரஜம் (கல்லெறிந்து தண்டனை) நிறைவேற்ற உத்தரவிட்டார்கள். அதன்படி அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். அப்போது அந்த ஆண், கற்களிலிருந்து அந்தப் பெண்ணை காப்பாற்றும் வகையில் அவளின் மீது வளைந்து நின்றதை நான் கண்டேன்." (Sahih al-Bukhari, Book 86: Hadith 6841).

இன்றைய சமூகத்தில், உடல் ஸினா பல புதிய வடிவங்களில் வெளிப்படுகிறது. திருமணத்திற்கு முன் உறவுகள், திருமணத்திற்கு வெளியான காதல் தொடர்புகள், காதல் செயலிகள் அல்லது வாழ்க்கைத் துணை தேடும் செயலிகள் (dating apps) மூலம் ஏற்படும் சந்திப்புகள் மற்றும் சமூக ஊடகங்களில் தொடங்கும் உறவுகள் ஆகியவை இதற்கு உதாரணங்களாகும். ஆரம்பத்தில் சாதாரண உரையாடலாகத் தோன்றினாலும், அது படிப்படியாக உணர்ச்சி நெருக்கத்தையும் பின்னர் சட்டவிரோத உறவுகளையும் உருவாக்கக்கூடும் (Esposito, 2011).

நவீன ஆய்வுகள், உலகமயமாக்கல், ஊடகங்களில் அதிகரித்த பாலியல் உள்ளடக்கம், நகர வாழ்க்கை மற்றும் சமூக கட்டுப்பாடுகளின் தளர்வு ஆகியவை இத்தகைய நடத்தைகளை அதிகரித்துள்ளதாக குறிப்பிடுகின்றன (Kamali, 2008). குறிப்பாக இளைஞர்களிடையே எவ்வித காதல் மற்றும் நீண்டகால உறவுப் பொறுப்புகளுமின்றி, உடலுறவு அல்லது நெருக்கமான

பழக்கத்தை (casual physical intimacy) மட்டும் மேற்கொள்ளும் பழக்கம் "hook-up culture" போன்ற தற்காலிக உறவுகள் அதிகரித்துள்ளன.

இஸ்லாம் இதனைத் தடுப்பதற்காக முழுமையான ஒழுக்க அமைப்பை முன்வைக்கிறது. அவற்றில் முக்கியமானது திருமணத்தை ஊக்குவிப்பதாகும்:

> "இன்னும், உங்களில் வாழ்க்கைத் துணை இல்லா (ஆடவர், பெண்டி)ருக்கும், அவ்வாறே (வாழ்க்கைத் துணையில்லா) ஸாலிஹான உங்கள் (ஆண், பெண்) அடிமைகளுக்கும் விவாகம் செய்து வையுங்கள்; அவர்கள் ஏழைகளாக இருந்தால், அல்லாஹ் தன் நல்லருளைக் கொண்டு அவர்களைச் சீமான்களாக்கி வைப்பான்; மேலும் அல்லாஹ் (கொடையில்) விசாலமானவன். (யாவற்றையும்) நன்கறிந்தவன்." (அல்குர்ஆன் 24:32).

மேலும் பார்வையைத் தாழ்த்துதல், தனிமையைத் தவிர்த்தல் மற்றும் ஒழுக்கமான சமூக சூழலை உருவாக்குதல் போன்ற வழிமுறைகளும் வலியுறுத்தப்படுகின்றன. இமாம் அல்-கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் ஆசைகளை கட்டுப்படுத்த நோன்பு, தொழுகை, திக்ர் மற்றும் சுயக் கண்காணிப்பு போன்ற வழிமுறைகளை பரிந்துரைக்கிறார் (Al-Ghazali, 2013). தவறு நிகழ்ந்தால் உடனடியாக தவ்பா செய்து அல்லாஹ்விடம் திரும்புவது மனிதனை ஆன்மீக ரீதியாக சீரமைக்க உதவுகிறது.

அல்குர்ஆன் கூறுகிறது:

> "தவிர, மானக் கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும், அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அவர்கள் (மனப்பூர்வமாக) அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள்; அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும், அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் (பாவ) காரியங்களில் தரிபட்டிருந்து விடமாட்டார்கள்." (அல்குர்ஆன் 3:135).

எனவே, உடல் ஸினா என்பது ஒழுக்க வீழ்ச்சியின் இறுதி மற்றும் மிகக் கடுமையான நிலையாகும். ஆனால் இஸ்லாம் இதனைத் தடுக்க அதன் ஆரம்ப நிலைகளிலேயே (பார்வை, சிந்தனை, பேச்சு, நடத்தை) முழுமையான கட்டுப்பாட்டை வலியுறுத்துகிறது. இதன் மூலம் மனிதன் தனது ஆசைகளை கட்டுப்படுத்தி, குடும்ப உறவுகளை பாதுகாத்து, சமூகத்தில் தூய்மையும் ஒழுக்கமும் நிலைநிறுத்த முடியும்.

### *06. முடிவுரை*

*இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் ஸினா குறித்து மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில், இது வெறும் உடல் சார்ந்த விபச்சாரச் செயல் மட்டுமல்ல என்பது தெளிவாகிறது. மாறாக, இது மனித வாழ்க்கையில் காணப்படும் பல நிலைகளைக் கொண்ட ஒரு விரிவான ஒழுக்கக் கருத்தாகும். கண்கள், காதுகள், நாவு, கைகள், கால்கள் மற்றும் இதயம் ஆகிய உறுப்புகளின் தவறான பயன்பாடுகள் அனைத்தும் ஸினாவின் பல்வேறு வடிவங்களாகக் கருதப்படுகின்றன. இவை அனைத்தும் மனிதனின் உள்ளார்ந்த ஆசைகள் மற்றும் எண்ணங்களைத் தூண்டி, இறுதியில் பெரிய பாவமான உடல் ஸினாவிற்கு வழிவகுக்கும் அபாயத்தை உருவாக்குகின்றன.*

*இஸ்லாம் இந்த பிரச்சினையை முன்னெச்சரிக்கை* (preventive) *அடிப்படையில் அணுகுகிறது. அதாவது, பாவம் நிகழும் முன்பே அதற்கான காரணங்களைத் தடுப்பதே இதன் நோக்கம். இதற்காக பார்வையைத் தாழ்த்துதல், ஒழுக்கமான பேச்சை கடைப்பிடித்தல், சிந்தனையை கட்டுப்படுத்துதல் மற்றும் இதயத்தை தூய்மையாக வைத்திருத்தல் போன்றவற்றை இஸ்லாம் வலியுறுத்துகிறது. இத்தகைய ஒழுக்கப் பயிற்சிகள் தனிநபரின் ஆன்மீக வளர்ச்சிக்கும் சமூக அமைதிக்கும் அடிப்படையாக அமைகின்றன.*

*மேலும், ஸினாவின் ஆரம்ப நிலைகளைப் புரிந்துகொள்வது இஸ்லாமிய ஒழுக்கக் கட்டமைப்பின் ஆழத்தையும் சமநிலையையும் வெளிப்படுத்துகிறது. சிறிய தவறுகளும் கவனிக்கப்படாவிட்டால் காலப்போக்கில் பெரிய பாவங்களாக மாறக்கூடும் என்பதால், மனிதன் எப்போதும் தனது எண்ணங்களிலும் நடத்தைகளிலும் விழிப்புடன் இருக்க வேண்டும். இதற்காக சுயக் கட்டுப்பாடு, தக்வா (இறை அச்சம்) மற்றும் ஒழுக்கமான வாழ்க்கை முறை ஆகியவை மிகவும் அவசியமானவை.*

*இன்றைய காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி, சமூக ஊடகங்கள் மற்றும் கலாசார மாற்றங்கள் மனிதர்களின் உறவுமுறைகளிலும் நடத்தை முறைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இதனால் ஒழுக்கச் சவால்கள் அதிகரித்துள்ள நிலையில், இஸ்லாமிய வழிகாட்டுதல்கள் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆசையைத் தூண்டும் சூழல்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதும், குடும்ப மற்றும் சமூக மதிப்புகளைப் பாதுகாப்பதும் ஒவ்வொரு மனிதரின் பொறுப்பாகும்.*

*இஸ்லாமிய போதனைகள் ஸினாவைத் தடுப்பதற்காக மட்டுமல்லாமல், ஒரு தூய்மையான சமூகத்தை உருவாக்கும் நோக்கத்தையும் கொண்டுள்ளன. திருமணத்தை ஊக்குவித்தல், சமூக ஆதரவு அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் ஆன்மீக விழிப்புணர்வை வளர்த்தல் போன்ற வழிமுறைகள் மனிதனை சரியான பாதையில் நிலைநிறுத்துகின்றன. தவறு ஏற்பட்டாலும்,*

உண்மையான மனப்பூர்வமான தவ்பா மூலம் மனிதன் மீண்டும் நேர்மையான வாழ்க்கைக்கு திரும்ப முடியும் என்பது இஸ்லாதின் கருணையுள்ள போதனையாகும்.

எனவே, ஸினா பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் மனிதனின் வெளிப்படையான செயல்களை மட்டுமன்றி, அவனது உள்ளார்ந்த எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தும் முழுமையான ஒழுக்க அமைப்பை வழங்குகிறது. இது தனிநபரின் ஆன்மீக வளர்ச்சியையும் சமூகத்தின் ஒழுக்க நிலைத்தன்மையையும் பாதுகாக்கும் வலுவான அடித்தளமாக அமைகிறது. இதன் மூலம் இஸ்லாமிய போதனைகள் காலத்தையும் சூழலையும் கடந்தும் மனித ஒழுக்கத்தை பாதுகாக்கும் நிலையான வழிகாட்டுதலாகத் திகழ்கின்றன.

## References


- Al-Ghazali, A. H. (2013). *Ihya ulum al-din* [Revival of the religious sciences]. Islamic Book Service.
- Al-Qaradawi, Y. (1995). *The lawful and the prohibited in Islam*. American Trust Publications.
- Esposito, J. L. (2011). *What everyone needs to know about Islam*. Oxford University Press.
- Ibn Kathir, I. (2000). *Tafsir Ibn Kathir* (abridged). Darussalam.
- Kamali, M. H. (2008). *Shari'ah law: An introduction*. Oneworld Publications.
- Nasr, S. H. (2002). *The heart of Islam: Enduring values for humanity*. HarperOne.